



# ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

# நிதித்துறை

## மானியக் கோரிக்கை எண். 50

## அறிவிப்புகள்

## 2022 - 2023


**முனைவர் பழனிவேல் தியாக ராஜன்**

நிதி மற்றும் மனிதவள

மேலாண்மைத்துறை அமைச்சர்

ஓய்வூதியங்களும் ஏனைய
ஓய்வுக்கால நன்மைகளும்

# நிதித்துறை

## மானியக் கோரிக்கை எண். 50

## அறிவிப்புகள்
2022 - 2023

முனைவர் பழனிவேல் தியாக ராஜன்
நிதி மற்றும் மனிதவள
மேலாண்மைத்துறை அமைச்சர்

# 1. பணி ஓய்வூதியத்தை குடும்ப ஓய்வூதியமாக மாற்றம் செய்வதை எளிமையாக்குதல்

தற்போது நடைமுறையில் உள்ள பணி ஓய்வூதியத்தை (Service Pension) குடும்ப ஓய்வூதியமாக (Family Pension) மாற்றம் செய்வதில் அதிக காலதாமதமும் நடைமுறை சிக்கல்கள் அதிகமாக உள்ளதாகவும் அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

தற்போது நடைமுறையில் உள்ள செயல் முறையைக் கீழ்க்கண்டவாறு எளிமைப்படுத்த இவ்வரசு முடிவெடுத்துள்ளது.

அ) இனிவரும் காலங்களில் புதிய ஓய்வூதியதாரர்களுக்கு, ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை தளத்தில் (IFHRMS) கணவன் / மனைவியின் அனைத்து விவரங்களும் பதிவு செய்யப்படும். எனவே, குடும்ப ஓய்வூதியம் கோரும் நேர்வுகளில் அவர்கள் கணவன்/ மனைவியின் இறப்புச் சான்றிதழ் மட்டும் சமர்ப்பித்தால் போதுமானதாகும்.

ஆ) நடப்பு ஓய்வூதியதாரர்களுக்கு தற்போது பயன்பாட்டிலுள்ள கூடுதலான விவரங்களை கோரும் படிவம் 14-ற்கு பதிலாக குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்கு எளிதான படிவம் மாற்றி அமைக்கப்படும்.



## 2. ஓய்வூதியர் நலன் (Pensioners' Welfare)

தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம், ஓய்வூதியர்கள் அளிக்கும் பங்களிப்பின் அடிப்படையில் ஒரு சுய உதவித் திட்டமாக செயல்படுத்தப்படுகிறது. ஓய்வூதியதாரர் இறக்கும் நேர்வில், அவரது துணைவர் / நியமனதாரருக்கு ரூ.50,000/- வழங்கப்படுகிறது. அதிக எண்ணிக்கையில் நிலுவையில் உள்ள கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு, இறந்த ஓய்வூதியதாரர்களின் குடும்பங்களின் கோரிக்கைகளைத் தீர்வு செய்வதற்கு ஏதுவாக இந்த அரசு ஜூலை 2021-இல் ரூபாய் 25 கோடி ஒப்பளிப்பு செய்தது.

கோவிட் பெருந்தொற்றுக்குப் பிறகு, கோரிக்கைகளின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளதால், நிலுவையிலுள்ள கோரிக்கைகளைத் தீர்வு செய்வதற்கு ஓய்வூதியதாரர் அளிக்கும் பங்களிப்பு போதுமானதாக இல்லை.

ஓய்வூதியதாரர்களின் குடும்பங்களின் நலனைக் கருத்தில் கொண்டு இவ்வரசு, மீண்டும் ரூபாய் 50 கோடியை சிறப்பு நிதியாக ஒதுக்கியுள்ளது. மேலும் நிலுவையிலுள்ள விண்ணப்பங்களுக்கு விரைவில் தீர்வு காண அரசு தனது ஆதரவை நல்கும்.

**முனைவர் பழனிவேல் தியாக ராஜன்**
நிதி மற்றும் மனிதவள
மேலாண்மைத்துறை அமைச்சர்